# கல்முனை மாநகர சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜனவரி 05 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மே 05 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாநகர சபை முதல்வருக்கு 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, கல்முனை மாநகர சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்முனை மாநகர சபையின் நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 10,453,272 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,100,429 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 10,909 | 2,728 | 12,313 |
| (ii) | குத்தகை வாடகை | 12,586 | 9,713 | 3,171 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,387 | 1,675 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 50,510 | 58,244 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தால் சேகரிக்கப்பட்டு மகாண வருவாய் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 1,081,858 தண்டப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரை கட்டணமான ரூபா 24,235,519 பெறப்படவில்லை.

## 2.3 செலவின அமைப்பு

மீளாய்வாண்டிற்கான மாநகர சபையின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினமும் வேறுபாடுகளும் கீழே காணப்படுகின்றன.

| செலவின விடயம் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளபடியானது | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 49,569 | 39,589 | 9,980 |
| ஏனையவை | 17,685 | 35,609 | (17,924) |
| உபமொத்தம் | 67,254 | 75,198 | (7,944) |
| மூலதனச் செலவினம் | 9,140 | 1,864 | 7,276 |
| நிகர மொத்தம் | 76,394 | 77,062 | (668) |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது

| பதவியின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்றுநர் | 07 | 03 |
| உதவு தரத்தினர் | 62 | 58 |
| ஆரம்ப தரத்தினர் | 105 | 94 |
| ஏனையோர் | - | 77 |
| | 174 | 232 |

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 5,645,203 ஆகும். இதில் ஓராண்டிற்கு மேற்பட்ட கணக்குகள் ரூபா 2,880,003 ஆகும்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு

(இ) வருவாய் நிர்வாகம்